திட்டங்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் /செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை தலைவர் :திரு.K.பாண்டியராஜ்

ந.க.ம.பி.அ.எண்:6/2023-2024 நாள் 09.02.2024

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் - கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம் -திட்டங்குளம் ஊராட்சி திட்டங்குளம் கிராம சர்வேஎண் 359/1A, ல் 7060.00 சமீ (1.74 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி அங்கீகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது

பார்வை :

1.அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் :04.05.2017

2. கூராய்வுக் கட்டணம் பல்வகை ரசீது எண்.1279 நாள்:09.02.2024 வளர்ச்சிக்கட்டணம் செலுத்திய எண். 20240208038853 நாள்:08.02.2024

3 நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தூத்துக்குடி நகர் ஊரமைப்பு அவர்களின் கடிதம் ந.க **.SWP/DTCP/THOOTHUKKUDI/LAYOUTNO:108/2023** நாள்:27.10.2023

4.மனுதாரர் திருமதி: விஜயசாந்தி அவர்களின் விண்ணப்பம் நாள்: 02.02.2024

ஆனை:

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம் திட்டங்குளம் ஊராட்சி திட்டங்குளம் கிராம சர்வேஎண்கள் 359/1A, ல் 7060 சமீ (1.74 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு பார்வை 3.ல் கண்ட கடித்தின்படி நகர ஊரமைப்பு துணை இயக்குநர் தூத்துக்குடி மாவட்டம் அவர்களால் மனைப்பிரிவு உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது

இதன் அடிப்படையில் கீழ்க்காணும் சிறப்பு நிபந்தனை மற்றும் பொது நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது

1.பார்வை 2.ல் காணும் கடிதத்தின்படி கூராய்வுக்கட்டணம் மனை ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 32(முப்பத்தி இரண்டு மனைகளுக்கு (ரூ.32000/- முப்பத்தி இரண்டு ஆயிரம் மட்டும்) மற்றும் மனுதாரர் மனையிடத்திற்கான சந்தை நில மதிப்பீட்டுத் தொகையில் 3% (மூன்று விழுக்காடு) அரசுகணக்கில் செலுத்தப்பட்டு அதற்கான செலுத்துச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது செல்லான்எண். 20240208038853 நாள்:08.02.2024

2.மேற்கானும் மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு இடங்கள் உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும் இதில் எவ்வித விதிமீறலும் அனுமதிக்கப்படாது

3.சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீதுள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும் மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளாம்

4. உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்ற ஆவணங்கள் வருவாய் துறையில் வழங்கப்பட்டு அதன் விபரம் பெறப்பட்டுள்ளது

5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் தார்சாலைகள் தரமாக அமைப்பட்டுள்ளது

6. மனையில் கட்டிடம் தனியாக அனுமதி பெற்றுக்கொள்ளப்படவேண்டும்

7. ஒப்புதல் அளிக்கப்பட்ட நுழைவாயில் 6*4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்க வேண்டும்

8. பார்வை 3.ல் கண்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இந்த மனைப்பிரிவுகளுக்கு பொருந்தும்

தலைவர்(பொ)
உதவி இயக்குனர் ஊராட்சி
கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம்

இனைப்பு :

சர்வே எண். 359/1A வரைபடம் :3 எண்ணிக்கை

பெறுநர்

திருமதி: விஜயசாந்தி 1/151 கிழக்கு தெரு கீழநாலந்தலா
திருவேங்கடம் தென்காசி

நகல்

1.சார்பதிவாளர் கோவில்பட்டி சார்பதிவகம்

2. நகரஊரமைப்பு துனை இயக்குநர்

தூத்துக்குடி மாவட்டம்

3.வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) கோவில்பட்டி

4. தி-3 இருப்பு கோப்பு

திட்டங்குளம் ஊராட்சி

கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம்
தூத்துக்குடி மாவட்டம்

அசல்

ஊராட்சி படிவம் எண்-6

பல்வகை வரவு ரசீது

விண்ணப்பதாரர் பெயர் :

பற்றுச்சீட்டு எண் : 1279

விண்ணப்பதாரர் முகவரி : விஜய சாந்தி
1-151 கிழக்கு தெரு கீழ நாலாட்டின்புதூர்
சிறு குளங்கடம் திருக்காதி
நாகர்கோவில் திட்டம் நாகம்

பற்றுச்சீட்டு நாள் : 09.2.2024

வ.எண்	கணக்கு தலைப்பு	விபரம்	தொகை ரூ.
1	மனைப் பிரிவு ஆய்வு கட்டணம்	திட்டங்குளம் வருவாய் கிராமம் சர்வே எண் 359/1A மனை பிரிவு ஆய்வுக் கட்டணம் மனை எண்.1, அளவு 2400 சதுர அடி மனை உரிமையாளர் திரு. ஆறுமுகம் மற்றும் பலர்	32000
		மொத்தம்	32000

ரூபாய் எழுத்தால்

வ.எண் : 0001279	பணம் செலுத்துபவரின் கையொப்பம்	ஊராட்சி செயலர்	ஊராட்சி தலைவர் / செயல் அலுவலர்

குறிப்பு : 1. இந்த பற்றுச்சீட்டு ஊராட்சி தலைவரின் Facsimile யும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால்தான் செல்லுபடியாகும்.
2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும். இடது கை பெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெற வேண்டும்.

மழை நீரை சேகரிப்போம்!

சுற்றுப்புற சூழலை பாதுகாப்போம்!!